உள்ளடக்கம் 194 பக்கம் பார்க்க
A-15
குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவரகம்,
மயிலணி சிவபுரம்,
இலங்கை.

காரைக்காலம்மையார்

அருளிச் செய்த

திருவிரட்டை மணிமாலையும் அற்புதத் திருவந்தாதியும்.

இலாபப் பணம் சங்கானை செங்கற் படை விநாயகராலயப் பூந்தோட்டத் திற்கு அற்பணஞ் செய்யப்பட்டது.

பட்டிமண்டபம்,
சங்கானை,
14-4-52.

க. இ. இராமலிங்கம் B. A.
பதிப்பாளர்.

விலை சதம் 50.

உ

சிவமயம்

முகவுரை:-

காரைக்காலம்மையார் என்னுந் திருத்தொண்டர் தன்கணவனாகிய தருமதத்தன் மறுதாரம் புகுந்தனனெனக் கண்டு சிவபெருமானிடத்தே எற்பு யாக்கையைப் பெற்றதன் பின் காரைக்காலென்னும் ஸ்தலத்திலே அற்புதத் திருவந்தாதியென்னும் இப்பிரபந்தத்தைப் பாடினார்கள். பொறையாமறிவுகுறைந்த இக்காலத்தில் இவ்வரும் பெருநூலைச் சைவ உலகம் ஆதரிக்குமென்று இதை அச்சிட்டு வெளிப் படுத்த முன் வந்துள்ளேன். இப்பதிப்பில் வரும் இலாபப் பணம் சங்கானையில் செக்கற்பனை யென்னும் வளவில் எழுந்தருளியிருக்கும் மகாதேவப்பிள்ளையாருக்கு ஒரு பூந்தோட்டம் நிறுவுவதற்கே பிரயோகிக்கப்படும்.

மெய்யன்பர்கள் இதைவாங்கி ஆதரிப்பதோடு நாள்தோறும் பாராயணஞ் செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு மூலப்பிரதி உதவியளித்தவர் திருவாளர் தி. த. சிவசம்புநாதப்புலவர், கட்டுடை இவருக்கே என்றென்றும் எம்நன்றி உரித்தாகுக.

பட்டிமண்டபம்
சங்கானை,
12-4-52.

இங்ஙனம்
க. இ. இராமலிங்கம் B. A.
(பதிப்பாளர்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

காரைக்காலம்மையார் அருளிச் செய்த

திருவிரட்டைமணி மாலை.

---

1 கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும்
போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங்கிருந்தற விர்தி
கண்டாய் தளராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்திடைவளர்
கோட்டு வெள்ளை
யிளந்திங்களு மெருக்கும் மிருக்குஞ்
சென்னி யீசனுக்கே.

2 ஈசவனல்லாதில்லையென நினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான்.

3 பிரானென்று தன்னைப்பன்னாள்
பரவித்தொழுவாரிடர் கண்
டிரானென்ன நிற்கின்ற வீசன்
கண்டீரின வண்டுகிண்டிப்

பொரா நின்ற கொன்றைப் பொதும்பர்க்
கிடந்து பொம்மென் றுறைவா
யாநின் றிரைக்குஞ் சடைச்
செம்பொனண் முடியந்தணனே.

4 அந்தணனைத் தஞ்சமென்றுட்பட்டாரா முமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்—கொந்தனை
பொன்கண்டாற் பூணுதேகோணகம் பூணடானே [ந்த
யென்கண்டாய் நெஞ்சேயினி.

5 இனிவார் சடையினிற் கங்கை
யென்பாளையங்கத்திருந்த
கனிவாய் மலை மங்கை காணி
லென் செய்தி கையிற் சிலையான்
முனிவார் திரிபுரமூன் றும்
வெந்தன் று செந்தீயின் மூழ்கத்
தனிவார்கணை யொன் றினுன்
மிகக்கோத்த வெஞ் சங்கரனே.

6 சங்கரனைத் தாழ்ந்தசடையானையச் சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை—யங்கொருநா
ளாவா வென்றுழாமைக் காப்பானை யெப்பொழுது
மோவாது நெஞ்சேயுரை.

7 உரைக்கப்படுவது மொன்றுண்டு
கேட்கிற் செவ்வான்றொடைமே
விரைக்கின்ற பாம்பினை யென்றுந்
தொடேலிழிந் தோட்டத் தெங்குந்
திரைக்கின்ற கங்கையுந் தேனின்
றகொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ்சென்னித்
தலைவைத்த வேதியனே

8 வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியனை யாதிரை நன்னாளானைச் — சோதிப்பான்
வல்லேனமாப்புக் குமாலவனு மாட்டாது
கில்லேனமா வென்றான் கீழ்,

9 கீழாயின துன்ப வெள்ளக்கடற்
றள்ளி யுள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டு
மென்பீர் வீரவார்புரங்கள்
பாழாயிடக் கண்ட கண்ட னெண்
டோளன் பைம்பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்து
பன்னாளுந் தலைநின்மினே,

10 தலையாயவைந் திணையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையாயின வுணர்ந்தோர் காண்பர்—தலையாய
வண்டத்தானு திரையானுலால முண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல்.

11 கழற் கொண்டசேவடி காண
வுற்றார் தமைப்பேணவுற்றார்
நிழற் கண்டபோழ்தத்து நில்லா
வினை நிகரேது மீன்றித்
தழற் கொண்ட சோதிச்செம்மேனி
யெம்மானைக்கைம்மா மலர்தூய்த்
தொழக் கண்டு நிற்கிற்குமோ
துன்னிநம்மடுந் தொல்வினையே.

12 தொல்லை வினை வந்து சூழாமுன்றுழாமே
யொல்லை வணங்கி யுமையென்னு—மெல்லியலோர்
கூற்றனைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றனை நெஞ்சேநினை.

13 நினையாதொழுதி கண்டாய் நெஞ்சமே
யிங் கொர்தஞ்சமென்று
பனையானையுமைக் கடம்மையுங்
தேறியொராறுபுக்கு
நனையாச் சடை முடிநம்பனந்
தாதை நொந் தாதசெந்தீ

யனையான மரர் பிரானண்ட
வாணனடித் தலமே.

14 அடித்தலத்தினன் றரக்கனைங்கான்கு தோளு
முடித்தலமு நீமூரித்த வாறென்—முடித்தலத்தி
லாருடியாரு வனலாடியவ்வனலி
னீருடி செய்யாடி நீ.

15 நீ நின்று தானவர் மாமதின்
மூன்று நிரந்துடனே
தீ நின்று வேவச்சிலை தொட்ட
வாறென் றிரங்கு வல்வாய்ப்
பேய் நின்று பாடப் பெரு
ங்காடரங்காப் பெயர்ந்து நட்டம்
போய் நின்று பூதந்தொழச் செய்யு
மொய் கழற் புண்ணியனே.

16 புண்ணியங்கள்செய்தனவும்பொய்நெறிக்கட்சாராமே
யெண்ணியோரைந்து மிசைந்தனவாற்—றிண்ணிய
கைம்மாவினீருரிவை மூவுருவும் போர்த்துகந்த
வம்மானுக்காட்பட்ட வன்பு.

17 அன்பாலடைவதெவ்வாறு
கொண்மேல தேராடரவங்
தன்பாலொருவரைச் சார
வொட்டாதது வேயுமன்றி

முன்பாயின தலையோடுகள்
கோர்த்தவை யார்த்துவெள்ளை
யென்பாயினவு மணிந்தங்
கொரேறு கந்தேறுவதே

18 ஏறலாலேற மற்றில்லையேயெம் பெருமா
னேறெலாம்பாயு மவிர்சடையார்—வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடனஞ்சுண்டார் தமக்கு.

19 தமக்கென்று மின்பணி செய்
திருப் பேறுக்குத் தாமொருநா
ளெமக்கொன்று சொன்னாலருளுங்
கொலா மிணையாது மின்றிச்
சுமக்கின்ற பிள்ளை வெள்ளேறொப்ப
தோன்று தொண்டைக் கனிவா
யுமைக் கென்று தேடிப்பெறுதுடனே
கொண்டவுத தமரே

20 உத்தமராய் வாழ்வாருலந்தக்காலுற்றார்கள்
செத்தமர மடுக்கித் தீயாமு—னுத்தமனாய்
நீளா ழிநஞ்சுண்ட நெய்யாடி தன்றிறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து.

உ

சிவமயம்

காரைக்காலம்மையார் அருளிச்செய்த

அற்புதத் திருவந்தாதி.

1 பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங்காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்பதிடர்.

2 இடர்களையா ரேனுமெமக் கிரங்காரேனும்
படருநெறி பணியாரேனுஞ்—சுடருருவி
லென்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ்சவர்க்கு.

3 அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோமென்று
மவர்க்கே நாமன் பாவதல்லாற்—பவர்ச்சடைமேற்
பாகாப்போழ் சூடுமவர்க்கல்லான் மற்றொருவர்க்
காகாப்போ மெஞ்ஞான்றுமாள்.

4 ஆளானோ மல்லலறிய முறையிட்டாற்
கேளாததென் கொலோ கேளாமை—நீளாகஞ்
செம்மையா னாகித் திருமிடறு மற்றொன்றா
மெய்ம்மையாட் கொண்டவிறை

5 இறைவனே யெவ்வுயிருந் தோற்றுவிப்பான் றோற்றி
யிறைவனே யீண்டிறக்கஞ் செய்வா—னிறைவனே

யெந்தாயென விரங்குமெங்கண்மேல் வெந்துயரம்
வந்தாலது மாற்றுவான்.

6 வானத்தானென்பாரு மென்க மற்றும்பர் கோன்
றானத்தானென்பாருந் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத்தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தா
னென்னெஞ்சத்தா னென்பன்யான்.

7 யானே தவமுடையேனென் னெஞ்சேநன் னெஞ்சம்
யானே பிறப்பறுப்பா னெண்ணினேன்—யானேயக்
கைம் மாவுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
வம்மா னுக்காளாயினேன்.

8 ஆயினே னாள்வானுக் கன்றே பெறற்கரிய
னாயினேனஃதன்றே யாமாறு—தூய
புனற்கங்கை யேற்றானோர் பொன்வரையே போல்வா
னனற் கங்கை யேற்றானருள்.

9 அருளே யுலகெலா மாள்விப்பதீச
னருளே பிறப்பறுப்பதானூ—லருளாலே
மெய்ப்பொருளை நோக்கும்விதியுடையேனெஞ்ஞான்று
மெப்பொருளு மாவதெனக்கு.

10 எனக்கினிய வெம்மானை யீசனையாமென்று
மனக்கினிய வைப்பாக வைத்தே—னெனக்கவனைக்
கொண்டேன் பிரானைக் கொள்வதுமே யின்புற்றே
னுண்டே யெனக்கரியதொன்று

11 ஒன்றே நினைந்திருந்தே னொன்றே துணிந்தொழிந்தே
னொன்றே யென்னுள்ளத்தி னுள்ளடைத்தே—னொன்றே
கங்கையான் றிங்கட்கதிர் முடியான்பொங் [காண்
ரங்கையாற் காளாமது. [கொளிசே

12 அதுவே பிரானாமா றாட்கொள்ளுமாறு
மதுவே யினிய றிந்தோமானா—லதுவே
பணிக்கணங்கு கண்ணியாரொண் ணுதலின் மேலோர்
தனிக்கணங்குவைத்தார் தகவு.

13 தகவுடையார் தாமுளரேற் றாரகலஞ்சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர்—மிகவடர
வூர்ந்திடுமா நாகமொரு நாண் மலை மகளைச்
சார்ந்திடுமேலே பாவந்தான்.

14 தானே தனி நெஞ்சந் தன்னையுயக் கொள்வான்
றானே பெருஞ் சேமஞ் செய்யுமாற்—றானேயோர்
பூணாகத்தாற் பொலிந்து பொங்கழல் சேர் நஞ்சுமிழு
நீணாகத் தானை நினைந்து.

15 நினைந்திருந்து வானவர்கணீண் மலராற்பாதம்
புனைந்து மடிபொருந்தமாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே யென்கின்
கென் செய்வான் கொல்லோவினி. [றேற்

16 இனியோ நாமுய்ந்தோ மிறைவன் றாள் சேர்ந்தோ
மினியோரிடரில்லை நெஞ்சே—யினியோர்

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,

வினைக்கடலையாக்குவிக்கு மீளாப்பிறவிக்
கனைக் கடலை நீந்தினோங் காண்.

17 காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்—காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய்நின்றவரன்.

18 அரனென்கோ நான்முகனென்கோ வரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்—முரணழியத்
தானவனைப் பாதத்தனிவிரலாற் செற்றானை
யானவனை யெம்மானையின்று.

19 இன்று நமக்கெளிதே மாலுக்கு நான்முகற்கு
மன்று மளப்பரியனானானை—யென்றுமோர்
மூவா மதியானை மூவேழுலகங்க
ளாவானைக் காணுமறிவு.

20 அறிவானுந் தானே யறிவிப்பான்றானே
யறிவாயறிகின்றான்றானே—யறிகின்ற
மெய்ப்பொருளுந்தானே விரிசுடர் பாராகாய
மப்பொருளுந் தானேயவன்

21 அவனே யிருசுடர் தீயாகாசமாவா
னவனே புவி புனல் காற்றாவா—னவனே
யியமானனாயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து.

22 வந்திதனைக் கொள்வதே யொக்குமிவ்வாளரவின்
சிந்தையது தெரிந்து காண்மினோ—வந்தோ
ரிராநீருண்டனைய கண்டத்தீரெங்கள்
பிரானீருஞ் சென்னிப்பிறை.

23 பிறையும் புனலுமனலரவுஞ் சூடு
மிறைவரெமக் கிரங்காரேலுங்—கறைமிடற்ற
வெந்தையார்க் காட்பட்டே மென்றென் றிருக்குமே
யெந்தையாவுள்ளமிது.

24 இதுவன்றே யீசன் றிருவுருவமாமா
றிதுவன்றே யென்றனக்கோர்சேம—மிதுவன்றே
மின்னுஞ்சுடருருவாய்மீண்டா யென்சிந்தனைக்கே
யின்னுஞ்சுழல்கின் றதிங்கு

25 இங்கிருந்து சொல்லுவ தெனெம் பெருமானெண்ணு
மெங்கும்பலிதிரியுமெத்திறமும்—பொங்கிரவி [தே
லீமவனத் தாடுவது மென்னுக்கென் றூராய்வோ,
நாமவனைக் காணலுற்ற ஞான்று.

26 ஞான்ற குழற் சடைகள் பொன்வரைபோன் மின்
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பின்— [னுவன
மிக்கயலே தோன்ற விளங்கிமிளிருமே [ஞான்றெங்கு
யக்கயலேவைத்தவரவு.

27 அரவமொன்றாகத்து நீ நயந்து பூணல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள்—முரணழிய

வொன்றுதார் மூவெயிலுமோரம்பா லெய்தானே
பொன்னா மற்றென்று பூண்.

28 பூணாகவொன்றா புனைந்தொன்று பெர்ங்கதளி
நாணாகமேன் மிளிர நன்கமைத்துக்—கோணாகம்
பொன்முடிமேற் சூடுவதுமெல்லாம் பொறியிலியேற்
கென் முடிவதாக விவர்.

29 இவரைப் பொருளுணர மாட்டாதாரெல்லா
மிவரையிகழ்வதே கண்டீ—ரிவர்தமது
பூக்கோல மேனிப் பொடி பூசியென் பணிந்த
பேய்க் கோலங் கண்டார் பிறர்.

30 பிறரறியலாகாப் பெருமையருந்தாமே
பிறரறியும் பேருணர்வுந்தாமே—பிறருடைய
வென்பேயணிந்திரவிற் றீயாடுமெம்மானார்
வன்பேயுந் தாமு மகிழ்ந்து.

31 மகிழ்ந்தி மடனெஞ்சே மானுடரினியுந்
திகழ்ந்தி பெருஞ்சே மஞ்சேர்ந்தா—யிகழாதே
யாரென் பேயேனு மணிந்துழல் வார்க்காட்பட்ட
பேரன் பேயின்னும் பெருக்கு.

32 பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறைபி
ன்னொருகதிரே போந்தொழுகிற்றெருக்குந்—தெரியின்
முதற் கண்ணான் முப்புரங்களன்றெரித்தான் மூவா
முதற் கண்ணான் றன் மார்பினால்.

33 நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக
நீலமணிமிடற்றா னீர்மையே—மேலுலந்த
தெக்கோலத்தெவ்வுருவா யெத்தவங்கள்செய்வார்க்கு
மக்கோலத்தவ்வுருவேயாம்.

34 ஆமா றறியாமே வல்வினைகளந்தரத்தே
நாமாளென்றேத் தார்நகர் மூன்றும்—வேமா
றொருகணையாற் செற்றானையுள்ளத்தா லுள்ளி
யருகணை யாதாரையடும்.

35 அடுங்கண்டாய் வெண்மதியென் றஞ்சி யிருள்போந்
திடங்கொண்டிருக்கின் றதொக்கும்—படங்கொ
ளணிமிடற்ற பேழ்வாயரவசைத் தான் கோல
மணிமிடற்றினுள்ளமறு

36 மறுவுடையகண்டத்தீர் வார்சடை மேனாகந்
தெறுமென்று தேய்ந்துழலு மாவா—வுறுவான்
றளர மீதோடு மேற்றானதனை யஞ்சி
வளருமோ பிள்ளை மதி.

37 மதியாவடலவுணர் மாமதின் மூன்றட்ட
மதியார் வளர் சடையினானை—மதியாலே
யென்பாக்கை யாலிகழா தேத்துவரேலிவ்வுலகி
லென்பாக்கை யாய்ப் பிறவாரீண்டு.

38 ஈண்டொளிசேர் வானத் தெழுமதியை வாளரவந்
தீண்டச் சிறுகியதே போலாதே—பூண்டதோர்

தாரே றுபாம்புடையான் மார்பிற் றழைந்திலங்கு
கூரே றுகா ரேனக்கொம்பு.

39 கொம்பினை யோர்பாகத்துக் கொண்ட குழகன்ற
னம்பவள மேனியது முன்னஞ்—செம்பொ
னணிவரையே போலும் பொடியணிந்தால் வெள்ளி
மணிவரையே போலு மறித்து.

40 மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழு தொண்டர் பாதம்—குறித்தொ
கொள்ளாத திங்கட்கு றுங்கண்ணிகொண்டார் [ருவர்
டுள்ளாதார் கூட்டமொருவு. [மாட்

41 ஒருபாலுலகளந்த மாலவனு மற்றை
யொருபாலுமையவளாமென்று—விருபாலு
நின்னுருவமாக நிறந்தெரிய மாட்டோமா
னின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து.

42 நேர்ந்தரவங்கொள்ளச் சிறுகிற்றோ நீயதனை
யீர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ—பேர்ந்து
வளங் குழவித்தாய் வளரமாட்டாதோ வென்னே
விளங்குழவித் திங்களிது.

43 திங்களிது சூடிச்சில்பலிக்கென் றூர் திரியே
லெங்கள் பெருமானே யென்றிரந்து—பொங்கொளிய
வானோர் விலக்காரேல்யாம்விலக்கவல்லமே
தானே யறிவான் றனக்கு.

44 தனக்கேயடியனாய்த் தன்னடைந்துவாழு
மெனக்கேயருளாவா றென்கொன்—மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான்.

45 பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டிப்—பிரானவனை
யெங்குற்றானென்பீர்களென்போல் வார்சிந்தையினு
மிங்குற்றான் காண்பார்க்கெளிது.

46 எளியதிவன்றே யேழை காள்யாது
மளியீரறிவிலீரானா—வொளிகொண்மிடற்
றெந்தையராப்பூண்டுழலுமெம்மானைக்கண்ணினைந்த
சிந்தையராய்வாழுந்திறம்.

47 திறத்தான் மடநெஞ்சே சென்றடைவதல்லாற்
பெறத்தானுமாதியோ பேதாய்—இறத்த
விருவடிக் கணேழைக்கொரு பாகமீந்தான்
றிருவடிக்கட்சேருந்திரு.

48 திருமார்பிலேனச் செழுமருப்பைப்பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கு—மொருநா
ளிதுமதி யென்றொன்றாக வின்றளவுந்தேரா
ததுமதி யொன்றில்லாவரா.

49 அராவிவளைத்தணையவங்குழவித்திங்கள்
விராவுகதிர் விரியவோடி—விராவுதலாற்

பொன்னோடு வெள்ளிப்புரி புரிந்தாற்போலாவே
தன்னோடே பொப்பான் சடை.

50 சடைமேலக் கொன்றை தருகனகள் போந்து
புடை மேவித்தாழ்ந்தனவே போலு—முடிமேல்
லலப்பாலக் கோலமதி வைத்தான்றன் பங்கின்
ருலப்பாவை நீலக்குழல்.

51 குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப்பாகத்
தெழிலாக வைத்தேக வேண்டா—கழலார்ப்பப்
பேரிரவிலீமப் பெருங்காட்டிற் பேயோடு
மாரழல் வாய் நீயாடுமங்கு.

52 அங்கண் முழுமதியஞ் செக்கரகல் வானத்
தெங்குமினி தெழுந்தா லொவ்வாதே—செங்கட்
டிருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர்.

53 சீரார்ந்த கொன்றைமலர் தழைப்பச்சேணுலவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்—போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்மீசன் பொன்முடி
காண்பார்க்குச் செவ்வே யோரகாரா. [தான்

54 காருருவக் கண்டத்தெங் கண்ணுதலேயெங்கொளித்தா
யோருருவாய் நின்னோடுழிதருவா—னீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியா னின்னுடைய
பாகத்தான் காணுமே பண்டு.

55 பண்மடாரஞ் சப்படுகடலினஞ்சுண்டு
கண்டங் கறுத்ததுவுமன்றியே—யுண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற் பான்மதியினுள்ளே
மணிமறு வாய்த்தோன்றும் வடு.

56 வடுவன் றெனக்கருதி நீ மதித்தியாயிற்
சுடுவெண் பொடி நிறத்தாய் சொல்லாய்—படுவெண்
புலாற் றலையினுற்ளுண் புறம்பேசக்கேட்டோ
நிலாத்தலையிற் சூடுவாய் நீ.

57 நீயுலக மெல்லாமிரப்பினு நின்னுடைய
தீயவரமொழியச்செல்கண்டாய்—தூய
மடவரலார் வந்து பலியிடாரஞ்சி
விடவரவ மேலாட மிக்கு.

58 மிக்கமுழங்கெரியும் வீங்கிய பொங்கிருளு
மொக்கவுடனிருந்தா லொவ்வாதே—செக்கர் போ
லாகத்தான் செஞ்சடையுமாங்கவன் றன்பொன்னுரு
பாகத்தாள் பூங்குழலும் பண்பும். [விற்

59 பண்புணரமாட்டேனீயேபணித்துக்காண்
கண்புணரு நெற்றிக் கறைக் கண்டா—பெண்புணரு
மவ்வுருவோ மாலுருவோ வானேற்றாய் நீறணிவ
தெவ்வுருவோ நின்னுருவமேல்.

60 மேலாயமேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலா மொளிபுதைத்தாலொவ்வாதே—மாலாய

கைம்மா மதக்களிற்றுக் காருரிவைபோர்த்தபோ
தம்மான் றிருமேனியன்று.

61 அன்றுந் திருவுருவங் காணுதேயாட்பட்டே
னின்றுந் திருவுருவங்காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோ நம்பிரானென் பார்கட்கென்னுரை
னெவ்வுருவோ நின்னுருவமேது. [க்கே

62 எதொக்குமே தொவ்வாதே தாகுமேதாகா
தே தொக்கு மென்பதனையாரறிவார்—பூதப்பால்
வில்வேட்டுகி விசயனோடேற்ற நாள்
வல்வேடனான வடிவு.

63 வடிவுடைய செங்கதிர்க்கு மாறுய்ப்பகலே
கெடிதுலவி நின்றெறிக்குங்கொல்லோ—கடியுலவு
சொன் முடிவொன்றில்லாத சோதியாய் சொல்லாயா
னின்முடி மேற்றிங்கணிலா.

64 நிலாவிலங்கு வெண்மதியை நேடிக் கொள்வான் போ
லுலாவி யுழிதருமா கொல்லோ— நிலாவிருந்த
செக்கரவ்வானமே யொக்குந் திருமுடிக்கே
புக்கரவங்காலேயே போன்று.

65 காலேயே போன்றிலங்கு மேனி
வேலேயே போன்றிலங்கும் வெண் நீறு—மாலேயின்
றுங்குருவே போலுஞ் சடைக்கற்றைமற்றவற்கு
வீங்கிருளே போலுமிடறு.

66 மிடற்றில் விடமுடையீரும் மிடற்றைநக்கி
மிடற்றில் விடங்கொண்டவாறே—மிடற்றகத்து
மைத்தா மிருள் போலும் வண்ணங் கரிதாலோ
பைத்தாடு நும்மார் பிற்பாம்பு.

67 பாம்பு மதியுமடமானும் பாய் புலியுந்
தாம்பயின்று தாழருவி தாங்குதலா—லாம்பொ
னுருவடிவிலோங் கொளி சேர்க்கண்ணுதலான் கோ
திருவடியின் மேய சிலம்பு. [லத்

68 சிலம்படியாளூடலைத் தான்றவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படி மேற் செவ்வரத்தஞ் சேர்த்தி—நலம்பெற்
றெதிராய செக்கரினுமிக்கோலஞ் செய்தான்
முதிராமதியான் முடி.

69 முடிமேற் கொடுமதியான் முக்கணனல்ல
வடிமேற் கொடுமதியோங் கூற்றைப்—படிமேற்
குனியவலமாமடிமை கொண்டாடப் பெற்றோ
மினிய வலமுண்டோ வெமக்கு.

70 எமக்கிதுவோ பேராசை யென்றுந் தவிரா
தெமக்கொருநாள் காட்டுதியோ வெந்தா—யமைக்க
போந்தெரிபாய்ந்தன்ன புரிசடையாய் பொங்கிரவி [வே
லேந் தெரிபாய்ந்தாடு மிடம்.

71 இடப்பாலவனத் தெழுமதியை நீயோர்
மடப்பாவை தன்னருகே வைத்தா—விடப்பாகங்
கொண்டாண் மலைப்பாவை கூறென்றுங் கண்டிலங்
கண்டாயே முக்கண்ணாய் காண். [காண்

72 சண்டெந்தையென் றிறைஞ்சிக்கைப்பணியான்செய்யே
லண்டம்பெறினுமதுவேண்டேன் - றுண்டஞ்சேர் [னே
விண்ணாளுந் திங்களாய் மிக்குலகமேழினுக்கு
கண்ணாளா வீதென் கருத்து.

73 கருத்தினனீ கருதிற்றெல்லா முடனே
திருத்தெலாஞ்சிக்கெனநான் சொன்னேன் - பருத்த
வெள்ள நீரேற்றா னடிக்கமல நீவிரும்பி [ரங்க
யுள்ளமே யெப்போது மோது.

74 ஓதநெடுங்கடல் களெத்தனையுமுய்த்தட்ட
வேத நிறைந்தில்லை யென்பராற் — பேதையர்க
ளெண்ணா திடும்பலியா லெண்ணோ நிறைந்தவா
கண்ணார் கபாலக்கலம்.

75 கலங்குபுனற்கங்கை யூடாலலா லு
மிலங்கு மதியியங்கலானு — கலங்கொள்
பரிசுடையானீண் முடிமேற் பாம்பியங்கலாலும்
விரிசடையாங் காணில் விசும்பு.

76 விசும்பில் விதியுடைய விண்ணோர்பணிந்து
பசும் பொண்மணி மகுடந்தேய்ப்ப — முசிந்தெங்
மெந்தாய் தழும்பேறியே பாவம்பொல்லாவா
மந்தாமரைபோலடி.

77 அடிபேரிற் பாதாளம் பேருமடிகண்
முடிபேரின் மாமுகடு பேரும் — கடக
மடிந்தாடுகைபேரில் வான்றிசைகள்பேரு
மறிந்தாடுமாற் றுதராங்கு.

78 அரங்கமாப் பேய்க்காட்டிலாடுவான் வாளா
விரங்குமோ வெவ்வுயிர்க்குமேழா — யிரங்குமே
லென்னாகவையான் றானெவ்வுலக மீந்தளியான்
பன்னாளிரந்தாற் பணிந்து

79 பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதா
லணிந்து மணிந்தவரையேத்தத் — துணிந்தென்று
மெந்தையார்க்காட் செய்யப்பெற்றவிதுகொலோ
சிந்தையார்க்குள்ள செருக்கு.

80 செருக்கினால்வெற்பெடுத்த வெத்தனையோ திண்டோ
ளரக்கனையுமுன் னின்றடர்த்த — திருத்தக்க
மாலயனுங்காணாதாற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்தகால்

81 காலனையும் வென்றோங் கடுநரகங் கைகழன்றோ
மேலையிருவினையும் வேரறுத்தோங் — கோல
வாணாரவிந்தழிய வெந்தீடம் பெய்தான்
சரணாரவிந்தங்கள் சார்ந்து.

82 சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தேயொத்திலங்கிச்சாரா
பேர்ந்தார்க்குத் தீக்கொடியின்பெற்றியவா-நேர்து]து
றாழ்சுடரோன் செங்கதிருஞ்சாயுந்தழல்வண் [ணரீற்
வீழ்சடையேயென்றுரைக்கு மின் [ணன்

83 மின்போலுஞ் செஞ்சடையான்மாலோடு மீண்டிசைந்
லென்போலுங் காண்பார்கட் சென்றீரேற்— றன் [தா
பொற்குன்று நீலமணிக்குன்றந்தாமுடனே [போலும்
நிற்கின்ற போலு நெடிது.

84 நெடிதாய பொங்கெரியுந் தண் மதியுநேரே
சடிதாங் கடுஞ்சுடரும் போலுங்—கொடிதாக
விண்டார்கண் மூம்மதிலும் வெந்தீயிலழியக்
கண்டானு முக்கணுங்கண்.

85 கண்ணாரக்கண்டு மென்கையாரக்கூப்பியு
மெண்ணார வெண்ணத்தா லெண்ணியும்—விண்ணோ
னெரியாடியென்றென்று மின்புறுவன்கொல்லோ
பெரியானைக் காணப்பெறின்.

86 பெறினும் பிறிதியாதும் வேண்டே நமக்கீ
துறினுமுறா தொழியு மேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகணெற்றிமேல் வைத்தான் றன்பேயாய்
நற்கணத்திலொன்றாய நாம்.

87 நாமாலை சூடியுநம்மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டுபுனைந் தன்பாய்—நாமோ
ரறிவினையே பற்றினு லெற்றேதடுமே
யெறிவினையே யென்னு மிருள்.

88 இருளி னுருவென்கோ மாமேகமென்கோ
மருளின் மணிநீல மென்கோ— வருளெமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேனக் கிலங்குவெண்மதிய
மொன்றுடையாய் கண்டத் தொளி.

89 ஒளி விலிவன் மதனையொண் பொடியாநோக்கித்
தெளிவுள்ள சிந்தையினிற் சேர்வா—யொளிநஞ்ச
முண்டவாயஃதிருப்ப வுன்னுடைய கண்டமிருள்
கொண்டவா றென்னிதனைக் கூறு.

90 கூறேமக்கீதெந்தாய் குளிர்சடையை மீதழித்திட்
டேறமிகப் பெருகி னென்செய்தி — சீறி
விழித்தூரும் வாளரவும் வெண்மதியுமீர்த்துத்
தெழித்தோடுங் கங்கைத் திரை.

91 திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கேயாளா
யுரைமருவி யாமுணர்ந்தோங் கண்டீர் — தெரிமினோ
விம்மைக்கு மம்மைக்குமெல்லாமமைந்தோமே
யெம்மைப் புறனுரைப்ப தென்.

92 என்னையுடையானு மேகமாய் நின்றானுந்
தன்னையறியாத தன்மையனும் — பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்
கருளாக வைத்தவன்.

93 அவன் கண்டாய் வானோர்பிரானுவானென்று
மவனைக் கண்டா யம்பவளவண்ண னவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பாலென்னெஞ்சே
மெய்த்தமர்ந் தன்பாய் நீவிரும்பு.

94 விருப்பினு னீபிரியகில்லாயோ வேறு
விருப்பிடமற்றில்லையோவென்னே - பொருப்பன்மகள்
மஞ்சுபோன் மால்விடையாய் நிற்பிரிந்துவேறிருக்க
வஞ்சுமோ சொல்லா யவள்

95 அவளோர் குலமங்கை பாகத்தகலா
ளிவளோர் சலமகளுமீதே — தவளநீ
றென்பணிவீரென்றும் பிரிந்தறியீ ரீங்கிவரு
ளென்பணியார் சொல்லு மினிங்கார்.

96 ஆர்வல்லார் காணவரனவனையன் பென்னும
போர்வையதனாலே போர்த் தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தானா முந்தனிநெஞ்சினுள் ளடைத்து
மாயத்தால் வைத்தோ மறைத்து.

97 மறைத்துலக மேழினிலும் வைத்தாயோவன்றே
றுறைப்போடு முன்கைக் கொண்டாயோ—நிறைத்திட்
டுளோங்கெழுந்து நீயெரிப்ப மூவுலகுமுள்புக்
களோங் தெழுந்த செந்தீயழல்.

98 அழலாட வங்கைசிவந்ததோ வங்கை
யழகாலழல் சிவந்தவாறோ—கழலாடப்
பேயாடுகானிற் பிறங்கவன லேந்தித்
தீயாடு வாயிதனைச் செப்பு.

99 செப்பேந்திளமுலையாள் காணவோ தீப்படுகாட்
டப்பேய்க் கணமவைதாங்காணவோ—செப்பெனக்கொ
றாகத்தானங்கா ரந்தனலு மிழுமைவாய [ன்
நாகத்தா யாடுன் னடம்.

100 நடக்கிற் படிநடுங்கு நோக்கிற் றிசைவே
மிடிக்கினுலகனைத்து மேங்கு—மடுக்கற்
பொருமேறேவானே றேபொன் றேப்பாய்நின்னே
றுருமேறே வொன்று வுரை.

உரையினா லிம்மாலை யந்தாதிவெண்பாக்
கரைவினாற் காரைக்காற் பேய்சொற்—பரவுவா
ராராத வன்பினோடண்ணலைச் சென்றேத்துவார்
பேராத காதல் பிறந்து.

பிழை திருத்தம்

	பக்கம்	பாட்டு	வரி	பிழை	வாசிக்க
	2	3	4	ன	னீ
தி மாலை	3	9	4	வீ	[illegible]
	6	19	8	த	த்
அ-தி	5	22	3	நீரு	நிரீரு
	8	43	2	ள்	ன்
	9	49	2	லோ	வோ
	10	50	1	ன	னி.
		53	4	யோரகார	யோர்கார
	11	55	1	மட	டட
			1		கடும்பகலி
	12	65	2	நீறு	ணீ
	13	66	1	மூயீ	முடையீ
	13	67	3	சேரக்க	சேர்கண்
	14	72	3	னுக்கு	னுக்குங்
		76	2	ண்	ன்
	15	82	2	நேர்துணி	நேர்ந்து ரின்ன
	15	83	2	சென்றீ	கென்றீ
			3	நில	நீல
	16	86	3	பேயாய்	பேயாய
	17	92	4	தவை	வை
		93	2	மவன	மவன்
	18	99	3	காரந்தனலு	காந்த னலு

காரைக்காலம்மையார் புராணம்

இறவாத வின்பவன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லும்மையெ
[ன்றும்
மறவாமைவேண்டுமின்னும்வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவா நீயாடும் போதுன்னடியின் கீழிருக்கவென்றார்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்.
இலங்கை.

ஸ்ரீ இலங்கா தேவி அச்சகம்,
சங்கானை.